பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 27 செவ்வாய்க்கிழமை 10.06.2025 கதிர் 213

## இது இனி ரகசியம் அல்ல!



கொள்கையாவது கோட்பாடாவது என்பது தமிழ்க் கட்சிகள் சிலவற்றின் உயிர்மூச்சு. ஆனால்வாக்குகளுக்காக எப்போதும் அவர்கள் கொள்கைக் குன்றுகள் போன்று ☞ 2

# பலஸ்தீன சம்பவங்கள் இலங்கை இனப்படுகொலையை ஒத்தவை

## அதை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தி கொழும்பில் செயற்பாட்டாளர்கள் தீர்மானம்

பலஸ்தீனத்தில் பதிவாகிவரும் சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை ஒத்திருப்பதாகவும், இப்பேரழிவைத் தடுப்பதற்கு பலஸ்தீனத்துக்கு எதிரான தமது ஒடுக்குமுறைகளை இஸ்ரேல் முடிவுக்குக்கொண்டுவரவேண்டும் எனவும் கொழும்பில் ஒன்றுகூடி வலியுறுத்தியுள்ள செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள், இஸ்ரேலியப்படையினரால் நிறுத்தப்பட்டிருக்கும் 'மட்லீன் சுதந்திரக் கப்பல்'காஸாவைநோக்கியஅதன்பயணத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதற்கு இடமளிக்கப்படவேண்டும் எனக் கோரியுள்ளனர்.

சூழலியல் செயற்பாட்டாளர் கிரெட்டா தன்பேர்க் உள்ளடங்கலாக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுடன் மனிதாபிமான உதவிப்பொருட்களைஏற்றியவாறுகாஸாவை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த கப்பலுக்குள் அத்துமீறி நுழைந்த இஸ்ரேலியப்படையினரால் அக்கப்பல் ☞ 2

## சிறைச்சாலைகளுக்கான பதில் ஆணையர் நியமனம்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் நிஷான் தனசிங்க,பதில்சிறைச்சாலைகள்ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.


இந்த நிலையில் அரசுத் தலைவர் பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டதாக ☞ 2

## கம்மன்பிலவிடம் நேற்று வாக்குமூலம் பெற்ற சிஐடி

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்றையதினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு (சிஐடி) அழைக்கப்பட்டிருந்தார். சுங்கத்தில் சோதனையின்றி 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகஅவர்தெரிவித்தகருத்து தொடர்பில்வாக்குமூலம்வழங்குவதற்காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கம்மன்பில, முறைகேடு குறித்து விசாரணைகளை மேற்கொள்வதை விடுத்து முறைப்பாடளித்தவர்களை விசாரிப்பது நியாயமற்றது என்றார். ☞ 2

# தையிட்டியில் நேற்று போராட்டம் இன்றும் தொடர்ந்து நடக்கும்





சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு வலியுறுத்தியும் நேற்றுப்போராட்டம்நடைபெற்றது. குறித்த போராட்டம் இன்றும் நடைபெறவுள்ளது.

திஸ்ஸவிகாரையில் இன்றுநடைபெறவுள்ள பொசன் பௌர்ணமி வழிபாட்டுநடவடிக்கைகளுக்காக ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் கொண்டுவரப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படும் நிலையில், பலாலி பொலிஸாரினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் போராட்டத்திற்குத் தடை விதித்து கட்டளையொன்றைப் ☞ 2

### பொது மன்னிப்பு முறைகேடு;

## சிறைச்சாலை ஆணையாளர் சிஐடியினரால் நேற்றுக் கைது

நேற்று பணி நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய உடனடியாகவே குற்றப் புலனாய்வுத் திணைக்கள (சிஐடி) அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இவர், ஜனாதிபதி பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக மூன்றாவது நாளாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நாளைய தினம் இன்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவை பணி இடைநீக்கம் செய்ய அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அரசுத் தலைவர் பொது மன்னிப்பை ☞ 2

## ஹரக்கட்டாவிடம் வாக்குமூலம் பெற இலஞ்ச, ஊழல் ஒழிப்புக் குழு முயற்சி

### சிஐடிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள, சக்திவாய்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர் எனக் கூறப்படும், குற்றஞ்சாட்டப்பட்ட நதுன் சிந்தக விக்ரமரத்ன எனப்படும் ஹரக் கட்டாவிடமிருந்து வாக்குமூலம் பெறுவதற்கு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டது.

ஹரக் கட்டா தொடர்பான ☞ 2

## ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜூன் 11இல் விசாரணை

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜூனி 11 குற்றப்புலனாய்வுத்துறையினரிடம் வாக்குமூலம் வழங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருந்துகள்இறக்குமதி தொடர்பாக முன்னாள் சுகாதாரஅமைச்சர்கெஹெலிய ரம்புக்வெல்ல அளித்ததகவல்கள்தொடர்பாக வாக்குமூலம் அளிக்க முன்னாள் அரசுத் தலைவர் குற்றப் புலனாய்வுத் துறைக்கு அழைக்கப்பட்டுள்ளார். நாட்டிற்குள் மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பாக கெஹெலிய ரம்புக்வெல்ல ☞ 2

## இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை பிரிவு பொலிஸ் அதிகாரி மாற்றம்

தேசியபொலிஸ்ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவில் இருந்து அதன் விசாரணைப் பிரிவு பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ். மொஹான் லால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே. பண்டார, அம்பாறை பிராந்தியத்தில் இருந்து குற்றப்புலனாய்வுத் ☞ 2

## கைதிகளை விடுவிப்பதில் கூட செயற்றினில்லா ஆளும்தரப்பு

### தயாசிறி எம்.பி. இளக்காரம்

கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதிலும் முறைகேடு இடம் பெறுவதைதவிர்த்துக்கொள்ளமுடியாத அளவுக்கு இந்த ஆளும்தரப்பின் செயற்திறன் காணப்படுகிறது. இந்த ஆளும்தரப்பு 'எல் போர்ட்' என்று முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட ☞ 2

## அ'புரம் சிறை அத்தியட்சகருக்கு ஜூன் 11 வரையும் விளக்கமறியல்

நேற்றுகாலைபொலிஸ்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அநுராதபுர சிறைச்சாலை அத்தியட்சகர் மொஹான் கருணாரத்ன ஜூன் 11 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று அநுராதபுர நீதிவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஊழல் மற்றும் மோசடி குற்றங்களில் தொடர்புடைய கைதி ஒருவரை, அரசுத் தலைவர் பொது ☞ 8

# பிரபல தொழிற்சங்கவாதி திடீர்ப் பணி இடைநீக்கம்

### விதிகளை மீறி தேர்தலில் போட்டியாம்

மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளரும், பிரபல தொழிற்சங்கவாதியுமான ரவி குமுதேஷ், திடீரெனப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நிறுவன விதிகளை மீறியதற்காக அவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்ட கடிதத்தின்படி, கொழும்பு தேசிய மருத்துவமனையின் மருத்துவ ஆய்வகத்தில் பணிபுரியும் ரவி குமுதேஷ், சில அரசு ஊழியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடைசெய்யும் விதிமுறைகளை மீறி கொழும்பு மாவட்டத்தில் இருந்து ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நடந்துகொள்வார்கள். தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் இந்தக் கட்சிகள் இவ்வாறுதான் நடந்துகொண்டன. இந்தக் கட்சிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம் என்று கருதிய பொது அமைப்புக்களையும் அரசியல் தன்னார்வலர்களையும்கொள்கைஎன்றபெயரில் ஏமாற்றிக்கொண்டே, ரணில்விக்கிரமசிங்கவுடன் பின்கதவு 'டீல்' வைத்துக்கொண்டதை இந்தக் கட்சிகளின் கொள்கைக்கான தெளிவான மிக அண்மைய சாட்சி. பொது அமைப்புக்களுடனும் அவர்கள் கையெழுத்து எல்லாம் வைத்தே கொள்கை ஒப்பந்தம் செய்திருந்தார்கள். இப்போது மீண்டும் ஒரு கொள்கைக் கூட்டில் கையெழுத்து வைத்தி-க்கிறார்கள். ஆனால் அந்தக் கொள்கைக் கூட்டு யாழ்ப்பாணத்துக்கு மட்டும்தான், அதற்கு வெளியே அந்தக் கூட்டிற்கு எந்த மதிப்பும் இல்லை என்று மிக இலகுவாகத் தூக்கி எறிந்துவிட்டார்கள்.

ஞாயிற்றுக்கிழமை தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் சித்தார்த்தன் இதனைத் தெளிவாகத் தெரிவித்தார். அவர்களுக்கு (தமிழ்த் தேசிய முன்னணி) யாழ்ப்பாணத்திற்கு வெளியே செல்வாக்கில்லை, அதை கஜேந்திரகுமாரிடமே நாங்கள்நேரில்சொல்லியிருக்கின்றோம், அதனால் நாங்கள் வன்னியிலும் கிழக்கிலும் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து ஆட்சியமைப்போம் என்றார் அவர். அதாவது இந்தக் கொள்கைக் கூட்டு எல்லாம் யாழ்ப்பாணத்திற்கு மட்டும்தானாம்.

அத்தோடு கஜேந்திரகுமார் போன்று "உருட்டாமல்" சித்தார்த்தன் மிகத் தெளிவாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க, அதிகாரத்தைப்பிடிக்கத்தான்தமிழ்காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்தோம் என்றும் மிகத் தெளிவாகத் தெவித்தார். இந்தத் தற்றுணிபு இல்லாத காரணத்தால் கொள்கைதான் முக்கியம், தமிழ் அரசுக் கட்சிக்கு சபைகளில் ஆட்சியை அமைக்க வேண்டும்என்றால்நாங்கள்அதையும்தருவோம் என்ற விதத்தில் எல்லாம் கஜேந்திரகுமார் உருட்டியிருந்தார். ஆனால் சித்தரோ மிகத் தெளிவாக அதிகாரத்திற்காகத்தான் இந்தக் கூட்டு, அதுவும் யாழ்ப்பாணத்தில் அதிகாரத்தைப் பிடிக்க காங்கிரஸுடன் கூட்டு, யாழ்ப்பாணத்திற்கு வெளியே அதிகாரத்தைப் பிடிக்க தமிழ் அரசுக் கட்சியுடன் கூட்டு என்று போட்டுடைத்துவிட்டார்.

இவர்சொல்வதைப்போன்றுயாழ்ப்பாணத்தில் தாலிகட்டிய மனைவியையும்யாழ்ப்பாணத்திற்கு வெளியே துணைவியையும் சங்கு வைத்திருக்க தமிழ் அரசு இணங்காது என்பதை சுமந்திரன் நேற்றுத் தெளிவுபடுத்திவிட்டார். வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், யாழ்ப்பாணத்தில் உள்ள சபைகளில் சங்கு கூட்டணிஎன்னசெய்கிறது என்பதைப்பொறுத்தே, வன்னியிலும்கிழக்கிலும்சங்குஆட்சியமைப்பதற்கு தமிழ் அரசின் ஆதரவு அமையும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி செயல்படும் விதத்தைப் பொறுத்தே வவுனியா மற்றும் வன்னிப் பிரதேசத்தில் உள்ள சபைகளில் எமது செயற்பாடுகளும் இருக்கும்.

யாழ்ப்பாணத்தில்உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி செயல்படவேண்டும். அவர்கள் அதற்கு மாறாகச்செய்யப்படுவார்களாக இருந்தால் வவுனியா மாநகர சபை மற்றும் வன்னிப் பிரதேசத்தில் உள்ள அனைத்து சபைகளிலும் நாமும் வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் செயற்படுவோம் என எதிர்பார்க்கக்கூடாது என்றார் அவர்.

இது தொடர்பில் தான் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் முக்கியஸ்தர்களுக்கு தெரிவித்திருக்கிறார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அவர் சொன்ன முக்கியஸ்தர்கள் என்போர் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன்தான். ஏனெனில் அவர்களுக்குத்தான்வவுனியாவிலும்மன்னாரிலும் தமிழ் அரசின் ஆதரவுடன் சபைகளைக் கைப்பற்றவேண்டிய தேவை இருக்கிறது. யாழ்ப்பாணத்திற்கு வெளியே புளொட்டுக்கோ ஈபிஆர்எல்எவ் இற்கோ தமிழ்த் தேசியப் பேரவையில் இருக்கும் உதிரிகளுக்கோ எந்த ஆதரவும் இல்லை. ஜனநாயகப்போராளிகளுக்கு வவுனியாவில் சிறு ஆதரவு இருந்தாலும் அவர்களும் அங்கு தீர்மானமிக்க சக்திகள் அல்லர். எனவே ஜனநாயகக் கூட்டணியில் ரெலோவைத் தவிர வேறு எவருக்கும் தமிழ் அரசின் ஆதரவு குறித்துக் கவலை இல்லை.

அதனால் செல்வம்தான் பாவம். மாட்டிக்கொண்டு முழிக்கிறார். நேற்று யாழ்ப்பாணத்தில்நடந்தஜனநாயகக்கூட்டணியின் உள்ளாட்சி சபை உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்விற்கும் ஓடோடி வந்த அவர் பங்காளித் தலைவர்களுடன் பேசினார். எதுவும் படிந்து வந்தமாதிரித் தெரியவில்லை. நிகழ்வில் பேசும்போதும் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் அரசுக் கட்சி என்று உருகினார். தமிழ் அரசுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவைக் கேட்பது நியாயமில்லை என்ற வகையில் முனகினார். இரண்டு பக்கத்திற்குள்ளும் மாட்டிக்கொண்டு முழிப்பவர் அவர்தான், தமிழ் அரசுக் கட்சி கைவிட்டால் அவருக்கு வவுனியா நகர சபை பறிபோய்விடும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே தட்டுத் தடுமாறி வெற்றிபெற்ற அவருக்கு வவுனியா நகர சபையையும் கைவிடுவதென்பது பேரிழப்பு.

யாழ்ப்பாணத்தில் சங்கு - சைக்கிள் கூட்டணியால்எந்தவொருசபையையும்தனித்துக் கைப்பற்ற முடியாது என்கிற நிலையிலும், இந்தக் கூட்டணி களத்தில் இறங்கி செயற்பட்டால் யாழ். மாவட்டத்தில் உள்ள 17 சபைகளிலும் தாம் வேட்பாளர்களை இறக்குவோம் என்று தமிழ் அரசுக்கட்சிஅறிவித்துள்ளநிலையிலும்கொள்கைக் கூட்டு, பொதுக் கட்டமைப்பு போலவே வந்த வேகத்திலேயே கிழித்துக்கொண்டு பறந்துவிடும் போலத்தான் தெரிகிறது.

அதன் பின்னர் மீண்டும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியினர் ஆளும்தரப்பின் அடிவருடிகள், துரோகிகள், தமிழ் மக்களுக்கு விரோதமானவர்கள் என்று கூறிக்கொண்டு சைக்கிள்காரர்கள் கிளம்புவார்கள். அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா என்று கடந்து போய்விட்டு, தேர்தலில் வைத்துச் செய்யவேண்டியதே மக்களின் கடமை..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பலஸ்தீன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் அக்கப்பல் விடுவிக்கப்பட்டு, காஸாவுக்கான அதன் பயணத்தை வெற்றி கரமாகப் பூர்த்திசெய்வதற்கு இடமளிக்கப் படவேண்டும் எனவும், இஸ்ரேலின் பிடிக்குள் இருந்து காஸாவை மீட்கவேண்டும் எனவும் வலியுறுத்தி இலங்கையில் இயங்கிவரும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தினால் நேற்று திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் கவனயீர்ப்புப்போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்போராட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள், பலஸ்தீன விடுதலை ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் 'பலஸ்தீன விடுதலை', 'பலஸ்தீனம் பலஸ்தீனர்களுக்கே உரியது', 'நாம் பலஸ்தீனத்துடன் உடன்நிற்கிறோம்', 'பலஸ்தீன இனவழிப்பை நிறுத்துங்கள்', 'ஐக்கியநாடுகள்சபையா? அல்லதுநியாயமற்ற நாடுகள் சபையா?', 'இலங்கையே, சரியான தரப்பின் பக்கம் நில்' என்பன உள்ளடங்கலாக பலஸ்தீனத்துக்கு ஆதரவான வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் சார்பில் கருத்து வெளியிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல், பலஸ்தீனத்தில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை ஒத்திருப்பதாகவும், இப்பேரழிவைத்தடுப்பதற்கு பலஸ்தீனத்துக்கு எதிரான தமது ஒடுக்குமுறைகளை இஸ்ரேல் முடிவுக்குக்கொண்டுவரவேண்டும் எனவும் வலியுறுததினார்

## இலஞ்ச,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.டி. அனுரங்க கல்கிசை பிராந்தியத்தில் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளதுடன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ. எல்.ஏ. பிரசன்னவுக்கு எல்பிட்டிய பிராந்தியத்தில் இருந்து நுகேகொட பிரந்தியத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.பீ. டீ. தீப்தி குமார நுகேகொடை பிராந்தியத்தில் இருந்து எல்பிட்டிய பிராத்தியத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் 08 பேர் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் இருவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## ரணில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் குற்றப் புலனாய்வுத் துறைக்கு புகார் அளித்திருந்தார்,

மேலும் முந்தைய ஆளும்தரப்பின் பல அமைச்சர்கள் ஏற்கனவே அந்த புகார் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையிடம் தங்கள் வாக்குமூலங்களை அளித்துள்ளனர்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு குறித்து முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் வாக்குமூலம் பெறப்பட உள்ளதாக குற்றப் புலனாய்வுத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கம்மன்பிலவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான அவர் நேற்றைய விசாரணை தொடர்பில் தெரிவித்ததாவது:

சுங்கத்தின் இருந்து எவ்விதமான பரிசோதனைகளுமின்றி 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாக சுங்க தொழிற்சங்கத்தினர் குறிப்பிட்டனர். அத்துடன் துறைமுக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தான் இந்த கொள்கலன்களை விடுவிப்பதற்கான உத்தரவை பிறப்பித்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கொள்கலன்களில் இருந்த பொருட்கள் தொடர்பில் ஆளும்தரப்பு உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. சுங்கத்திணைக்களம் கடந்த ஓரிரு மாதங்களில் ஒன்றைகுறிப்பிட்டுவிட்டுதற்போது பிறிதொன்றை குறிப்பிடுகிறது. இந்த கொள்கலன்களில் இருந்த பொருட்கள் தொடர்பான விவரங்களை நான் பகிரங்கப்படுத்துவேன்.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களுடன் தொடர்புடைய அதிகாரிகள் பெல்ஜியம், அவுஸ்ரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயற்சிக்கிறார்கள். இவர்களுக்கு எதிராக முதலில் பயணத்தடை விதிக்க வேண்டும். முறைகேடு குறித்து விசாரணைகளை மேற்கொள்வதை விடுத்து முறைப்பாடளித்தவர்களை விசாரிப்பது நியாயமற்றது.

என்னை அச்சுறுத்த ஆளும்தரப்பு முயற்சிக் கிறது. அத்துடன் சிறைக்கு அனுப்புவதற்கும் பல்வேறுவழிகளில்முயற்சிக்கிறது. ஆளும்தரப்பின் எந்த முயற்சியும் வெற்றிப்பெறாது என்றார்.

## ஹரக்கட்டாவிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸ்ஸங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நடத்தப்படும் விசாரணை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட நதுன் சிந்தகவிடம் வாக்குமூலம் பதிவு செய்ய நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அரச சட்டத்தரணி சஜித் பண்டார தெரிவித்தார்.

அதன்படி, இலஞ்சஊழல்ஆணைக்குழுவின் அதிகாரிகள்பிரதிவாதியிடமிருந்துவாக்குமூலம் பதிவு செய்வதற்கு வசதியாக உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரினார்.

கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸ்ஸங்க, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் பிரதிவாதியிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்வதற்கு வசதியாக பயங்கரவாத விசாணைப் பிரிவுக்கு உத்தரவிட்டார்.

## சிறைச்சாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதற்காக, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார்.

அத்துடன் 09ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் அரசுத் தலைவர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தையிட்டியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று போராட்ட பகுதியில் ஒட்டப்பட்டுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், காணி உரிமையாளர்கள் உள்ளிட்ட 27 நபர்கள் மற்றும் அமைப்புக்களுக்கு எதிராகவே குறித்த கட்டளை பெறப்பட்டுள்ளது.

இருப்பினும் கட்டளையில் பெயர் குறிப்பிடப்படாதவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இன்றும் போராட்டம் தொடரும் என்று அறிவித்துள்ளனர்.

முன்னைய ஆட்சிகளில் நடைபெற்றதைப் போலவே தமிழ் மக்களின் போராட்டங்களை ஒடுக்குவதற்கும் தடுப்பதற்கும் அநுரவின் ஆட்சியிலும் பொலிஸார் செயற்படுகின்றனர், அதற்கு ஆட்சியாளர்கள் அனுமதிக்கின்றனர் என்று மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

## சிறைச்சாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதமாகப் பயன்படுத்தி கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## கைதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து இன்று உண்மையாகியுள்ளது. இவர்கள் வாய்ச்சொல் வீரர்களே தவிர செயல் வீரர்களல்ல என்று புதிய ஜனநாயக முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் தொடக்கத்தில் இருந்து நாடாளுமன்றத்திலும், வெளியிலும் குறிப்பிட்டோம். இதற்கு ஆளும்தரப்பு பதிலளிக்காமல் தான்தோன்றித்தனமாக செயற்பட்டது. என்னை நெருக்கலுக்குள்ளாக்கும் வகையில் இவ்விடயம் குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடளிக்கப்பட்டது.

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்கு கடந்த வாரம் முன்னிலையாகி வாக்குமூலமளித்தேன். எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாங்கள் குறிப்பிடும் கருத்துக்களை கொண்டு எம்மை நெருக்கடிக் குள்ளாக்கவே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. இதற்கு குற்றப்புலனாய்வுதிணைக்களத்தை ஆளும்தரப்பு பயன்படுத்திக் கொள்கிறது. ஆளும்தரப்பின் இந்த செயற்பாடு வெட்கக்கேடானது.

இந்த ஆளும்தரப்பின் பெரும்பாலான உறுப்பினர்களின் திருட்டு கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டம் தொடர்பில் உண்மை வெளிவந்ததன் பின்னர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளித்தார்கள். ஆளும் தரப்பின் உறுப்பினரது குடும்ப பிரச்சினைக்கும் குற்றப்புலனாய்வுதிணைக்களத்துக்குசென்றார்கள். தம்மை தூய்மைப்படுத்திக் கொள்வதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தை ஆளும் தரப்பினர் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அரசுத் தலைவர் அனுமதியில்லாமல் முறைகேடான வகையில் கைதி ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளமை வெளிவந்துள்ளது. அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் சிறைதண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு 10 நாட்களுக்குள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெசாக் பண்டிகையன்று பொதுமன்னிப்பு வழங்க வேண்டிய கைதிகளின் விவரங்களை சிறைச்சாலை தலைமையகம் நீதியமைச்சுக்கு அனுப்பி வைக்கும், நீதியமைச்சு அந்த பெயர் பட்டியலை பரிசீலனை செய்து, அதில் ஏதேனும் சட்ட சிக்கல் உள்ளதா என்பதை ஆராயும், அதன் பின்னர் அந்த பெயர் பட்டியல் அறிக்கை அரசுத் தலைவர் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அரசுத் தலைவர் செயலகத்தில் அந்த அறிக்கை பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் அறிக்கை சிறைச்சாலை தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். ஆகவே இது பரந்துப்பட்டதொரு செயற்பாடாகும்.

கைதிகளுக்குபொதுமன்னிப்புவழங்குவதிலும் முறைகேடு இடம்பெறுவதை தவிர்த்துக் கொள்ள முடியாத அளவுக்கு இந்த ஆளும்தரப்பின் செயற்திறன் காணப்படுகிறது. இந்த ஆளும்தரப்பு 'எப் போர்ட்' என்று முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட கருத்து இன்று உண்மையாகியுள்ளது. இவர்கள் வாய்ச்சொல் வீரர்களே, தவிர செயல் வீரர்களல்ல, தான்தோன்றித்தனமாக செயற்படுவது மாத்திரமே ஆளும்தரப்பின் கொள்கையாக உள்ளது.

## பிரபல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் போட்டியிட்டார். வேட்புமனுவில் கையெழுத்திட்ட நாளான ஒக்டோபர் 10, 2024 முதல் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ரவி குமுதேஷ் இடைநீக்க காலத்தில் ரவி குமுதேஷிற்கு சம்பளம் வழங்கப்படாது. அத்துடன் அவர் நாட்டைவிட்டுவெளியேறவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தனது குடியிருப்பு முகவரியில் ஏற்படும் எந்தவொரு மாற்றத்தையும் அவர் சுகாதார அமைச்சகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

இடைநீக்ககாலத்தில்அரசுஊழியர்களுக்கு வழங்கப்படும்சலுகைகளும்ரவிகுமுதேஷிற்கு மறுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கைதிக்கு பொதுமன்னிப்பு முறைகேடு; நீதி அமைச்சர் ஹர்ஷ கூறும் விளக்கம்

பொதுமன்னிப்பு வழங்குவதற்காக நீதியமைச்சு அரசுத் தலைவர் செயலகத்துக்கு அனுப்பிய பெயர் பட்டியலிலும், அரசுத் தலைவர் செயலகம் சிறைச்சாலை தலைமையகத்துக்கு அனுப்பி வைத்த பெயர் பட்டியலிலும் அத்துல திலகரத்ன என்ற கைதியின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. அரசுத் தலைவரின் உயர் அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்தியவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷ நாணயக்கார தெரிவித்தார்.

அரசுத் தலைவர்யின் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பினர் நீதியமைச்சின் முன்பாக நேற்று திங்கட்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நேரில் சென்று சந்தித்த நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, அவர்களை நீதியமைச்சின் காரியாலயத்துக்குள் அழைத்து அவர்களுடன் சுமூகமான முறையில் கலந்துரையாடினார்.

இதன்போது சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் பிரதிநிதிகள் 'சிறைச்சாலையில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் தீவிரமடைந்துள்ளது என்று குறிப்பிட்டதுடன், ஒருசில அதிகாரிகள் கைதிகளிடம் இலஞ்சம் பெற்று அரசுத் தலைவர் பொதுமன்னிப்பை முறைகேடான வகையில் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவிக்கின்றனர் என்றும் தெரிவித்தனர்.

இவ்வாறான மோசடிகளால் அரசுத் தலைவர் பொதுமன்னிப்பு கிடைக்க வேண்டிய கைதிகள் பாதிக்கப்படுகின்றனர் எனவும், அது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்றும் குறிப்பிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த நீதியமைச்சர், இந்தக் கைதி விடுவிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் ஜூன் 6 பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின. இந்தச் செய்தி தொடர்பில் ஆராய்ந்து அன்றைய தினம் 06.30 மணியளவில் 15 பக்கங்களை கொண்ட அறிக்கை ஒன்றை அரசுத் தலைவர் செயலகத்துக்கு அனுப்பி வைத்தேன். இந்த விடயத்தில் அரசுத் தலைவரின் அதிகாரம் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிக்கையில் சுட்டிக்காட்டினேன். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசுத்தலைவர் செயலகம் ஜூன் 7 குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடளித்தது.

பொதுமன்னிப்புக்காக நீதியமைச்சு அரசுத் தலைவர் செயலகத்துக்கு அனுப்பி வைத்த பெயர் பட்டியலிலும், அரசுத் தலைவர் செயலகம் சிறைச்சாலை தலைமையகத்துக்கு அனுப்பி வைத்த பெயர் பட்டியலிலும் அத்துல திலகரத்ன என்ற கைதியின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. அரசுத் தலைவரின் உயர் அதிகாரம் முறைகேடான வகையில் பயன்படுத்தப்பட்டு இந்த கைதி விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் நீதியமைச்சு துரிதமாக செயற்படவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுவது அடிப்படையற்றது. அரச உயர் அதிகாரிகளை அமைச்சரின் தீர்மானத்துக்கு அமைய பதவி இடைநிறுத்த முடியாது. அதற்கு முறையான வழிமுறைகள் உள்ளன. ஆகவே இந்த விடயத்தில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தை விசாரணைக்குட்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தை சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை தயாரிக்கப்பட்டு அன்றைய தினமே மும்மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. அரசுத் தலைவர் தலைமையில் நேற்று கூடிய அமைச்சரவை கூட்டத்தில் முன்வைத்த யோசனைக்கு அமைவாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அரசுத் தலைவர்யின் உயர் அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்தி இந்த கைதி விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்

## மழைக் காலநிலையால் சுவாச நோய்கள் அதிகரிப்பு

நிலவும் மழையுடனான வானிலையால் சுவாச நோய்கள் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுவாச நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதார அமைச்சின் தொற்றுநோய் அறிவியல் தொடர்பான விசேட வைத்தியர் அத்துல லியனபத்திரன பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது பெ ருத்தமானதென அவர் கூறினார்.

சுவாச நோய்கள் தொடர்பில் முதியோர், கர்ப்பிணித்தாய்மார், குழந்தைகள், நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் உள்ளிட்ட தரப்பினர் விசேட கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார அமைச்சின் தொற்றுநோய் அறிவியல் தொடர்பான விசேட வைத்தியர் அத்துல லியனபத்திரன தெரிவித்தார்.

நீரிழிவு, சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளிட்ட நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் சுவாசத் தொற்றுகளுக்கு உள்ளாகும்போது உடனடியாக சிகிச்சை பெறுவது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ள எந்தவொரு தரப்பினரும் மூச்சு விடுவதில் சிரமம் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.



## வடக்கில் காணி அபகரிப்பு விவகாரம்

## காணி அமைச்சருக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பிய கஜேந்திரகுமார் எம்.பி.

வடக்கிலுள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி இரத்துச்செய்யப்படும் திகதி தொடர்பில் காணி அமைச்சர் லால்காந்தவுடன் கலந்துரையாடியதன் பின்னர் அறிவிப்பதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகள் 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமைகோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என ஆளும்தரப்பின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் அவ்வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக இரத்துச்செய்ய வேண்டும் எனக்கோரி வலுப்பெற்ற எதிர்ப்பை அடுத்து, அவ்வர்த்தமானி அறிவித்தலைத் திரும்பப்பெற அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போதுவரை வெளியிடப்படவில்லை.

அதேபோன்று பிரதமருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால்காந்தவினால் வாக்குறுதியளிக் கப்பட்டவாறு ஜூன் 3 நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது இந்த விவகாரம் பற்றி எந்தவொரு விசேட



கூற்றும் வெளியிடப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த வர்த்தமானி அறிவித்தல் எப்போது நீக்கப்படும் என குறித்த திகதியொன்றை அறிவிக்குமாறு குறுந் தகவல் ஊடாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் தான் கோரியிருந்தார் என்றும், இதுபற்றி திங்கட்கிழமை (9) பிரதமர் ஹரினி அமரசூரியவுடன் பேசவிருக்கிறார் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் இதுபற்றி கஜேந்திரகுமாரிடம் வினவியபோது, இவ்விடயம் தொடர்பில் காணி அமைச்சர் லால்காந்தவுடன் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரதனது குறுந்தகவலுக்குப் பதில் அனுப்பியிருந்தார் என்று குறிப்பிட்டார்.

அத்தோடு இவ்விடயம் தொடர்பில் பிரதமரின் செயலாளருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறார் எனவும், அவரும் இதுகுறித்து உடனடியாக ஆராய்வதாக உறுதியளித்தார் எனவும் கஜேந்திரகுமார் கூறினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தையிட்டியில் நடந்தது எச்சரிக்கையா?

தையிட்டி பகுதியில் தனியார் காணிகளில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றக் கோரி அமைதியாகப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது நீதிமன்றத் தடை விதிக்கப்பட்டது தொடர்பான செய்தி, நாட்டின் ஜனநாயகத்துக்கே நேரடிச் சவாலாகும். இது, கடந்த ஆட்சிகளில் காணப்பட்ட மக்களின் உரிமைகள் மீதான ஆதிக்க நடவடிக்கைகளை நினைவூட்டும் வகையில், தற்போதைய ஆளும்தரப்பின் முகமூடியை மாற்றிப் பிடிக்கிறது.

இந்த நிகழ்வின் பின்னணி முக்கியமானது. தையிட்டி பகுதியில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணியில், அந்த மக்களின் அனுமதி அல்லது சட்ட அனுமதி இன்றி விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இது, சிங்கள பௌத்த அடையாளங்களைத் தமிழர் வாழும் பிரதேசங்களில் விதைத்துவைத்து, அவர்களின் நில உரிமை மற்றும் பாரம்பரிய உரிமைகளை அழிக்கும் கலாசாரப் படுகொலை நோக்கிய செயல். இதற்கு எதிராக அப்பகுதி மக்கள் பல வருடங்களாக அமைதி முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றார்கள். இப்போது அந்தப் போராட்டத்தை அடக்குமுறையால் எதிர்கொள்கிறது இந்த ஆட்சி என்ற செய்தி அதிர்ச்சியளிக்கின்றது.

இவ்வாறு ஒரு சமயக் கட்டடம் கட்டப்படுவதால், சமுதாயங்களில் பதற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்று. அதனைக் கட்டுப்படுத்த வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பு. ஆனால், இக்கட்டடம் காணி உரிமையாளர்களின் அனுமதியின்றி ஆக்கிரமிக்கப்பட்டுக் கட்டப்பட்டிருப்பதை ஆளும்தரப்பு ஏற்றுக்கொண்டிருப்பினும் அதனை அகற்றுவதற்குன நடவடிக்கைகளை எடுப்பதைவிடுத்து, அதற்கெதிராக அமைதியாகப் போராட முயலும் மக்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடுவதை ஏற்க முடியாது.

அதனை எதிர்த்த மக்களின் அமைதியான உரிமை வெளிப்பாடுகள், நீதிமன்ற உத்தரவு மூலம் தடுக்கப்படுவதே, மிகவும்கவலைக்கிடமானது. இவ்வாறுநீதிமன்றஉத்தரவுகள் ஆளும்தரப்பின் ஒப்புதலன்றி முன்னெடுக்கப்பட்டிருக்க வாய்ப்புகள் இல்லை.

அநுர குமார தலைமையிலான ஆளும்தரப்பு, தனது தேர்தல் வாக்குறுதிகளில் மனித உரிமைகள், நீதிமுறை சுதந்திரம், இனத்துவநிலைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒழித்தல் உள்ளிட்ட முக்கியமான மாற்றங்களுக்கு வாக்குறுதியளித்திருந்தது. ஆனால், இன்று நடைமுறையில் பார்க்கும்போதோ, பழைய நடைமுறைகளின் நிழலிலேயே புதிய ஆட்சி நகர்கிறது எனும் நிலைதான் தெரிகிறது. இது, நாட்டில் மனித உரிமை பாதுகாப்பிற்கும், நம்பிக்கையின் அரசியல் கட்டமைப்பிற்கும் மிகப் பெரிய கேள்வியாக எழுகிறது.

தையிட்டியில் நடைபெற்ற சம்பவம் ஒரு தனிப்பட்ட சம்பவமாகவே பார்க்கக்கூடாது. இது, எதிர்காலத்தில் நடைபெறும் போராட்டங்கள் மீது எவ்வாறு நீதிமன்றங்கள் மற்றும் ஆட்சி இயந்திரம் செயல்படும் என்பதை முன்காட்டி காட்டும் ஒன்று. அதேநேரத்தில், இது ஒரு நுணுக்கமான எச்சரிக்கையும்கூட – ஜனநாயகத்தின் அடிப்படையான உரிமைகள், இந்நாட்டில் எந்த அளவுக்கு பாதுகாக்கப்படுகின்றன என்பதற்கான கேள்வியை எழுப்பும் ஒன்று.

எனவே, தையிட்டி விவகாரம் குறித்த முறையான விசாரணையும், சட்டவிரோதகட்டடங்களைஎதிர்த்துமக்களால் மேற்கொள்ளப்படும் அமைதியான செயற்பாடுகளுக்கு உரிய சட்ட பாதுகாப்பும் உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டும். அது மட்டும் தான்– இந்த நாடு ஒரு உண்மையான ஜனநாயக நாடு என்பதை நிரூபிக்கும் வழி.

# ஊடகவியலாளர்களுக்கு இலவசமாக மேலங்கிகள்

(அபு அலா)




இப்போட் மிரர் ஊடக அமைப்பின் உறுப்பினர்களுக்கு ஊடகவியலாளர்களுக்கான மேலங்கி நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இப்போட் மிரர் ஊடக அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முனாஸின் வழிகாட்டலின் கீழ், அதன் முகாமையாளர் அமீர் தலைமையில் சாய்ந்தமருதில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பிரிவின் பீடாதிபதி போராசிரியர் பாசில் பிரதம அதிதியாகவும், உலமாக் கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீட் மற்றும் ஆசிரிய ஆலோசகர் சத்தார் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களுக்கான அங்கிகளை வழங்கி வைத்தனர்.

ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தையொட்டி புரவலர் ஹாஷிம் உமர் பவுண்டேசன் அமைப்பினால், நாடளாவிய ரீதியிலுள்ள ஊடக அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டதற்கமைவாக, இப்போட் மிரர் ஊடக அமைப்புக்கு கிடைக்கப்பெற்ற நிதி உதவியில் இந்த மேலங்கிகள் வழங்கப்பட்டன.

# முன்னாள் அமைச்சர் நளின் மேன்முறையீடு செய்தார்

2015 அரசுத் தலைவர் தேர்தல் காலத்தில், 14,000 கரம் பலகைகளையும் 11,000 டாம் பலகைகளையும் சட்டவிரோதமாக வாங்கி, விளையாட்டு சங்கங்களுக்கு விநியோகித்ததன் மூலம் ஆளும்தரப்புக்கு 53 மில்லியன் ரூபாவுக்கும் மேல் நட்டத்தை ஏற்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, 25 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் நளின் பெர்ணான்டோ, இந்தத் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

இந்த மேல்முறையீட்டு மனு, உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், மூவரடங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழு, நளின் பெர்ணான்டோவுக்கு 25 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதித்தது.

இதனைத் தொடர்ந்து, இந்தத் தீர்ப்பை இரத்து செய்ய உத்தரவிடுமாறும், தன்னை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுதலை செய்ய உத்தரவிடுமாறும் நளின் பெர்ணான்டோ உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

# 35 லீற்றர் கசிப்பு சிக்கியது வீரமுனை இளைஞர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை 02 பகுதியில் உள்ள வீட்டில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பை ஊழல் ஒழிப்பு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற சோதனையில் 35 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அதே பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 35 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த கைது நடவடிக்கையானது, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என்.றிபாய்டீன் தலைமையிலான குழுவினர் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

காலைக்கதிர் Kalaikkathir

## போதைப் பொருள் பாவனை, விற்பனை தொடர்பில்

# சாவகச்சேரியில் வர்த்தகர் கைது 3 மாணவர்களிடம் விசாரணை

(சுபேசன்)

சாவகச்சேரி நகரில் வர்த்தகர் ஒருவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பாடசாலை மாணவர்களுக்கு நீண்ட காலமாக போதைப்பொருள் விற்றுவந்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர் பகுதியில் பாடசாலை மாணவர்கள் சிலர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கும் போதைப்பொருள் குற்றச்செயல் தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவல்களுக்கு அமைவாக சாவகச்சேரிஉள்ள பிரபல பாடசாலையின் தரம் 10 மற்றும் 11 மாணவர்கள் மூவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில்- சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மரத்தளபாட திருத்தவேலை செய்யும் நிலையத்தை நடத்தும் 45 வயதான வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 330



போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் மருத்துவப் பரிசோதனைக்கு உற்படுத்தப்பட்டபோது அவரும் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதும் தெரியவந்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்குப் போதை மாத்திரை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தில் தான் ஐஸ் போதைப்பொருளை பெற்று பாவித்துவருகிறார் என்று அவர் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அமெரிக்கப் பேராசிரியர் தென் கிழக்கு பல்கலையில்

(நூருல் ஹுதா உமர்)

அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள பிரின்ஸ்டன் நகரத்தில் அமைந்துள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் இம்மானுவேல் க்ரெய்க் (Emmanuel Kreike) கடந்த வாரம் தென்கிழக்குப் பல்கலைகழகத்துக்கு வருகை தந்திருந்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் புவியல் துறையின் தலைவர் மூத்த விரிவுரையாளர் நிஜாமிரின் அழைப்பின்பேரில் பேரில் வருகைதந்திருந்த பேராசிரியர் இம்மானுவேல்க்ரெய்க், உபவேந்தர் பேராசிரியர் ஜுனைடீனையும் சந்தித்து பல்வேறு விடயங்கள்



குறித்தும் கலந்துரையாடினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் டார்ஜிலிங்கில் உள்ள சவுத்ஃபீல்ட் கல்லூரி (Southfield College) ஆகியவற்றின் இணைப்பில் நடைபெற்ற பன்னாட்டு பன்முகக் கல்வி மாநாட்டில் முக்கிய உரையாளர் (keynote speaker) ஆக பேராசிரியர் இம்மானுவேல்க்ரெய்க் (Emmanuel Kreike) பங்கேற்றிருந்தார்.










காலைக்கதிர் Kalaikkathir

# சிறுவர் பாதுகாப்பு, உரிமைகள் அரச அலுவலர்கள் இணைந்து செயற்படுவது குறித்து ஆராய்வு

சிறுவர்களின்பாதுகாப்புமற்றும்உரிமைகள் தொடர்பில், சிறுவர் சட்டங்களினூடான வழிகாட்டுதலின் கீழ் பங்கேற்கும் சகல உத்தியோகத்தர்களும் இணைந்து செயற்படுவதற்கான வழிகாட்டுதல் கலந்துரையாடல் சனிக்கிழமை வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் சுஜீவா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா பிரதம அதிதியாகவும், சுகாதார அமைச்சின் செயலர் ஜெயராணி சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றனர். வளவாளர்களாக ஓய்வுபெற்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மற்றும் சட்டத்தரணி தற்பரன் ஆகியோர் பங்குபற்றினர்.

இதன் முக்கியத்துவம் மற்றும் தொடர்ச்சியான செயற்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் நன்னடத்தை திணைக்களத்தின் ஆணையாளரால்கருத்துமுன்வைக்கப்பட்டது.

பிரதம செயலாளர், நன்னடத்தை திணைக்கள ஆணையாளரால் தெரிவித்த விடயங்களை தன்னால் உணரக்கூடியதாக இருந்ததாகவும், கலந்துரையாடுல்கள், வழிகாட்டுதல் செயலமர்வுகள் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

வளவாளராகப் பங்கேற்ற சட்டத்தரணி தற்பரன், சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் இடர்பாடுகள் தொடர்பாகவும், நடைமுறைப்படுத்தலின்போது காணப்படும் கூட்டுப்பொறுப்புப் பற்றியும் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஓய்வுபெற்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன், வடக்குமாகாணத்தில்யாசகம்செய்பவர்களால் ஏற்படும் பிரச்சினைகளையும், யாசகம் சார் சட்டங்களையும்மத்திய,மாகாணரீதியல்லாது சகலரும் ஒன்றிணைந்த சட்ட ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நலிவுற்றசமுதாயத்தினரேகூடியளவுசமூகப் பிரச்சினைகளான பாலியல் துஸ்பிரயோகம், உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை போன்றவிடயங்களால்பாதிப்படைகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டினார். குடும்பங்களின் வறுமையும், சமூகத்தில் ஏற்படும் கலாசார மாற்றம், தொலைபேசி பாவனை, சமூக வலைத்தள பாவனை என்பனவும் இடர்பாடுகளுக்குக் காரணமாக உள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார். இவர்களுக்கானமுறையானவழிகாட்டல்களில் சமூகப்பொறுப்புணர்வுடன் சகலரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பாடசாலை மட்டத்தில் ஏற்படும் சிறுவர் உரிமை மீறல்களையும், முறைப்பாடுகளையும் கண்காணிப்பதற்கு முறைப்பாட்டுப்பெட்டி, கண்காணிப்பு கமரா என்பன சில இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகளிலும்இவைபொருத்துப்பட்டுமுறைப்பாட்டுப் பெட்டியின் திறப்பு நன்னடத்தை உத்தியோகத்தர், சிறுவர் உரிமை பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டு அவர்கள் முன்னிலையிலேயே திறக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் குழந்தையைத் தத்தெடுப்பது தொடர்பான விடயங்களை தேசிய நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் கையாள்வதே பொருத்துமானதாக அமையும் என்றும் தெரிவித்தார்.

சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் மீளிணைத்தல் செயற்பாடுகளின் முக்கியத்துவம் தொடர்பிலும் அவர் தெளிவுபடுத்தினார்.

பிற்பகல் அமர்வில் வடக்கு மாகாண ஆளுநர் பங்கேற்றார். அவருடன் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசனும் கலந்துகொண்டார்.

ஆளுநர் தனது உரையில், அலுவலர்கள் மத்தி மாகாணம் என்று பிரிந்து செயற்படாமல் எல்லோரும் எமது பிள்ளைகளே என்ற அடிப்படையில் செயற்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.பாடசாலைகளில்முறைப்பாட்டுப்பெட்டிகள் வைக்கப்படுதல் மற்றும் அதனைக் கண்காணித்து கையாளல் தொடர்பான விடயங்களில் கல்வி அமைச்சின் செயலருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் குறிப்பிட்டார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.06.2025இல் வெளியிடப்பெற்றது